சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
அசல் வழக்கு எண்.143/2014

பெயர். குமார் (DW2) நாள்: 07.01.2020

**பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆறுமுக நாயக்கருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 மகள்களும், 5 மகன்களும் உண்டு. அவர்களின் பெயர் மணிவண்ணன், மோகன், சேகர், குமார், குணசீலன், தமிழரசி, ராஜேஷ்வரி, புஷ்பா ஆகியோர்கள் ஆவர். மணிவண்ணன் தற்போது இறந்துவிட்டார். மணிவண்ணனின் வாரிசுகள் யார் என்றால் வேல்குமார், இந்திரா, கஸ்தூரி ஆகியோர்கள் ஆவர். சீதா என்பர் மணிவண்ணனின் மனைவி ஆவர். மோகன் என்பவர் இறந்துவிட்டார், அவரின் மனைவி பெயர் அம்சா. இறந்துபோன மோகனின் மகள் பெயர் அம்பிகா. என்னுடைய மனைவி பெயர் அஞ்சலிதேவி, அவர் இந்த வழக்கில் 11வது பிரதிவாதி. வழக்கு சொத்துக்கள் என் தந்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் என் அப்பாவால் சம்பாதிக்கப்பட்ட சொத்து தான். தாவா சொத்து நீதிமன்றத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு வீடும், பக்கத்து கிராமமான கருணாகரவிலாகத்தில் 5 சென்ட் காலி மனை என்றால் சரிதான். தாவா சொத்தான வீட்டில் என் தந்தை இறக்கும் வரை குடியிருந்தார் என்றால் நாங்கள் அனைவரும் அங்கு தான் குடியிருந்தோம். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் சிறுகளத்தூரில் குடியிருக்கிறேன், மாடியில் குடியிருக்கிறேன். நான் சிறுகளத்தூரில் குடியிருக்கவில்லை என்றும் மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையை பார்த்தால் நான் மதுராந்தகத்தில் குடியிருந்தது தெரிய வரும் என்றால் நான் சிறுகளத்தூரில் தான் குடியிருக்கிறேன், மேற்படி அடையாள அட்டையை காண்பிக்க தயாராக இருக்கிறேன். என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்கமூலத்தில் மதுராந்தகம், வடராயன் தெருவில் குடியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் அங்கு உணவகம் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் பிரமாண

வாக்குமூலத்தில் மதுராந்தகம், வடராயன் தெருவில் குடியிருப்பதாக சொல்லிவிட்டு அதற்கு முரணாக தாவா சொத்தில் குடியிருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வீட்டில் மின் இணைப்பு உள்ளது. மேற்படி மின் இணைப்பிற்காக கட்டணத்தை நான் செலுத்தி வந்ததற்காக ரசீதை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தந்தைக்கு மூளையில் ரத்த வெடிப்பு ஏற்பட்டு சென்னையிலுள்ள மலர் மருத்துவமனையில் இறப்பதற்கு நான்கு வருடங்களுக்கு முன்பிருந்து சிகிச்சை பெற்றிருந்தார் என்றால் இல்லை. என்னுடைய தந்தை மலர் மருத்துவமனையில் சிகிச்சை ஏதும் எடுக்கவில்லை. என் தந்தைக்கு சிகிச்சை பலனளிக்காமல் மயக்கநிலையில் (கோமா நிலையில்) தான் இருந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை பேசமுடியாத நிலயில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என் தாய் மற்றும் தந்தையின் முன்னிலையில் சிறுகளத்தூரில் உள்ள என் வீட்டில் தான் எழுதப்பட்டது. யார் அந்த உயிலை எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும், தாந்த் பிரகாஷ் என்பவரை வரவழைத்து என் தந்தை உயில் எழுதினார். மேற்படி தாந்த் பிரகாஷ் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் விழுதமங்கலம். உயில் எழுதும்போது நான் உடன் இருந்தேன். உயில் எழுதும்போது நீலமேகம் என்ற வழக்கறிஞர் இருந்தார். நீலமேகம் என்பவர் விழுப்புரத்தை சேர்ந்த வழக்கறிஞர். மதுராந்தகத்தில் உள்ள வழக்கறிஞரை வரவழைக்காமல் மிக தொலைவில் அமைந்துள்ள விழுப்புரத்திலிருந்து வழக்கறிஞர் ஏன் வந்தார் என்றால் அவர் என்னுடைய தந்தையின் நண்பர் என்ற வகையில் உயில் எழுதும்போது உடன் இருந்தார். மதுராந்தகத்தில் என் தந்தைக்கு வழக்கறிஞர் நண்பர்கள் யாரும் இல்லையா என்றால் அது எனக்கு தெரியாது. உயில் எழுதும்போது மேற்கண்ட நால்வர் மட்டும் தான் இருந்தார்களா என்றால் சாட்சி குப்புசாமி முதலியார், ஜெயக்குமார், தாந்த் பிரகாஷ், என் பெற்றோர்கள் மற்றும் வழக்கறிஞர் நீலமேகம் ஆகியோர்கள் இருந்தார்கள். உயில் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் தாந்த் பிரகாஷ் தான்

தட்டச்சு செய்து எடுத்து வந்தார், அவர் எங்கு தட்டச்சு செய்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் முதல் இன சொத்தான வீட்டில் எனது தம்பி குணசீலன் தரைத்தளத்தில் குடியிருக்கிறார் என்றால் இல்லை, அவர் சோத்துப்பாக்கத்தில் வந்தவாசி சாலை முருகன் சூப்பர் மார்கெட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் உள்ளார். 12.08.2000ம் தேதியில் தாவா வீட்டில் குணசீலன் குடியிருந்தார் என்றால் இல்லை. தாவா வீட்டிற்கான மின் இணைப்பு கட்டணம் மற்றும் வரிகளை வாதி குணசீலன் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கு ஒரே ஒரு மின் இணைப்பு தான் என்றால் சரிதான். வழக்கறிஞர் நீலமேகத்தை யார் சென்று அழைத்து வந்தார்கள் என்றால் அவராகதான் வந்தார். சாட்சி மீண்டும் தன் தந்தை வர சொன்னதாக கூறுகிறார். குப்புசாமியும், ஜெயக்குமாரும் தற்போது உயிருடன் தான் இருக்கிறார்கள். அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறானா என்றால் விசாரிக்கப்போகிறேன். பி.வா.சா.ஆ-3 என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் தான். பி.சா.ஆ.3ல் என்னுடைய தந்தையின் கையெழுத்து உள்ளது. பி.சா.ஆ.3ல் உள்ள என் தந்தையின் கையெழுத்தும் பி.சா-ஆ.4ல் உள்ள என் தந்தையின் கையெழுத்தும் வித்தியாசமாக உள்ளது என்றும் ஒரே மாதிரியாக இல்ல என்றும் சொன்னால் இரண்டு கையெழுத்தும் ஒரே மாதிரியாக தான் உள்ளது. உயில் எழுதப்போகும் விவரத்தை மற்ற வாரிசுகளுக்கு தெரிவித்தாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீலமேகம் என்னுடைய வழக்கறிஞரா என்றால் என் தந்தையால் சொல்லப்பட்ட வழக்கறிஞர். பி.சா.ஆ.4 உயில் என் தந்தையால் எழுதப்படவில்லை என்றும் அவ்வாறு எழுதப்பட்டிருந்தால் அது சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும் பி.சா.ஆ-4ல் உள்ளது என் தந்தையின் கையெழுத்து இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ-4ல் உள்ளது என் தந்தையின் கையெழுத்து இல்லை என்றும் அவர் கையெழுத்து போடும் நிலையில் அவருடைய மனம் மற்றும் உடல் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. யாருடைய பெயரில் ஆவணங்களை

எழுதிவைக்கக்கூடிய நிலையில் அவருடைய உடல்நிலை இல்லை என்று சொன்னால் சரியல்ல. உயில் பதிவு செய்திருந்தால் என் தந்தையின் கைரேகை தேவைப்படும் என்றும் பி.சா.ஆ-3 மற்றும் 4ல் உள்ள கைரேகை வேறுப்பட்டு அதன் மூலம் உண்மை தெரிய வந்துவிடும் என்பதால் உயில் பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் வழக்கறிஞர் நீலமேகம் பதிவு செய்யப்பட வேண்டிய தேவை இல்லை என்று சொன்னதால் பதிவு செய்யப்படவில்லை. பி.சா.ஆ.4 உயிலானது தாந்த் பிரகாஷ், ஜெயகுமார் மற்றும் குப்புசாமி மற்றும் நீலமேகம் ஆகியோருடன் சேர்ந்து என்னால் பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியான 11வது பிரதிவாதியின் மீது 20.04.2006ம் தேதி செட்டில்மென்ட் பத்திரம் எழுதிவைத்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ-6 செட்டில்மென்ட் பத்திரம் நான் என் மனைவிக்கு எழுதிவைத்த ஆவணம் என்றால் சரிதான். அதில் வாசகங்கள் சரியானது என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் 2வது பக்கத்தில் என் தகப்பனாருக்கு பரிவர்த்தனை பத்திரம் மூலம் கிடைத்த சொத்து என்று குறிப்பிட்டுள்ள சங்கதி சரியானது தான். என் தகப்பனர் ஆறுமுக நாயக்கர் காலமான பிறகு அவருடைய ஒரே வாரிசான என்னால் எழுப்படும் ஆவணம் என்று பி.சா.ஆ.6ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் எனக்கு உயில் மூலம் கிடைத்த சொத்தினை செட்டில்மென்ட் எழுதுவதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான், அதில் உயில் மூலம் கிடைத்த சொத்து என்ற வாசகம் விடுப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்பு இந்த வழக்கில் எதிர்வியாஜம் செய்வதற்காக உயில் தயாரிக்கப்பட்டதால் தான் உயில் பற்றிய விவரம் பி.சா.ஆ-6ல் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு என் மீது தான் பாசம் உள்ளது என்றும் மற்ற வாரிசுகள் மீது பாசம் இல்லை என்றும் சொன்னால் சரிதான். என் தந்தை இறந்த போது வாதி கொள்ளி வைத்தார் என்றால் இளைய மகன் என்ற முறையில் வைத்தார். என் தந்தைக்கு மகள்களின் மீது பாசம் உள்ளதா என்றால் என்னால் அதை சொல்ல முடியாது, அவர்கள் என் தந்தையை வந்து பார்த்துவிட்டு செல்வார்கள்.

பி.சா.ஆ-4 உயிலானது பொய்யானது என்றும் அதன் அடிப்படையில் என்னால் தாவா சொத்தின் மீது உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்துக்களுக்கு வரி என்னால் செலுத்தப்பட்டுள்ளதா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்த நிலுவை தொகைகைளையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் செலுத்தியிருக்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ-8 மற்றும் 9ல் நிலுவை தொகையை செலுத்துப்பட்ட விவரம் தெரியவரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 8ல் ஒரு பாகம் வாதிக்கு உள்ளது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)